SRI LANKA RED CROSS SOCIETY
International Federation of Red Cross and Red Crescent Societies
ICRC

# இணைந்த ஊடக அறிக்கை

Ref No – 20110506/1

## சர்வதேச செஞ்சிலுவை தினம் 2011

### தொண்டர்கள் : மனிதாபிமான நடவடிக்கையின் உன்னதம்

**கொழும்பு 06 மே 2011** – வெள்ளம், வறட்சி,யுத்தம், பஞ்சம், மண்சரிவு அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்களாக இருந்தாலும் இலங்கை, ஹெய்டி, பாகிஸ்தான்,லிபியா,சிரியா, எகிப்து, ஜப்பான் போன்ற எந்தநாடாக இருந்தாலும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் மற்றும் உலகெங்கிலும் இருக்கின்ற செஞ்சிலுவை நிறுவனங்களே முதலில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. காயப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு முதலுதவி சிகிச்சைகளை மேற்கொள்கின்றது. அவர்களுக்கான தண்ணீர் மற்றும் சாப்பாடு போன்ற அத்தியாவசிய தேவைகளை கவனிக்கின்றது. சமூகத்தினரின் நலனுக்காக 150 வருடங்களாக இவ்வாறான சேவைகளில் ஈடுபட்டு வருகின்றதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றோம்.

இவ்வருடம் சர்வதேச தொண்டர் சேவையின் 10வது வருடம் என்பதுடன் “ தொண்டர் சேவையின் ஐரோப்பிய வருடமுமாகும்” செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் உலகின் மிகவும் விசாலமான மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான வழிகாட்டியாக திகழ்வதற்கு பாரிய பங்களிப்பை வழங்கியவர்களை கௌரவிக்கும் சந்தர்ப்பமாகவும் இது அமைந்துள்ளது. தற்போது இரண்டாயிரம் பேரில் ஒருவர் செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டராக உள்ளார். இதன்மூலம் ஒவ்வொரு சமூகத்தை சேர்ந்தவரும் அந்த சமூகத்தினருக்காக தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ளதை அறிந்துகொள்ளலாம். இதனை பெருமைக்குரிய விடயமாகவும் கொள்ளலாம்.

இலங்கையிலும் நிகழ்காலத்தில் 60,000 இற்கும் அதிகமானவர்கள் தொண்டர்களாக பணியாற்றி வருகின்றதுடன் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்பட்டபோது தமது பெறுமதியான நேரத்தை செலவிட்டு மக்களுக்கான சேவையை வழங்கியுள்ளனர். “ இலங்கையின் 75 வருட செஞ்சிலுவை சங்க வரலாற்றில் மக்களுக்கு பாரிய அளவில் சேவையாற்றிய பெருமை தொண்டராக கடமையாற்றியவர்களையே சாரும்” “ தொண்டர் ஊழியர்களின் கடமையை வரையறுக்கவோ அவர்கள் பணியின் பெறுமதியை வரைவிலக்கணப்படுத்திவிட முடியாது என இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையின் அனர்த்தம் ஏற்பட்டபோதெல்லாம் தொண்டர் ஊழியர்களின் மீது நம்பிக்கை வைத்தே பணிகள் முன்னெடுக்கப்பட்டது. உலக செஞ்சிலுவை தினத்தன்று நாம் அவர்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டர் ஊழியர்கள் அனர்த்தங்களில் சிக்கிய மக்களுக்கு உதவிகளை செய்பவர்களாக இருந்தபோதிலும் சில சமயம் அவர்களும் அந்த அனர்த்தங்களில் அகப்பட்டவர்கள் என்பதும் மிக முக்கியமானவிடயமாகும் என செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்மேளனத்தின் இலங்கைக்கான குழுவின் தலைவர் பொப் மெக்கெரோ தெரிவித்துள்ளார். அவர்களிடம் பிறருக்கு சேவையாற்ற வேண்டிய உன்னதமான எண்ணம் உள்ளமையானது பிறரின் தேவைகளின்போது தமது நலன்தொடர்பில் அக்கறை செலுத்தாமல் பிறருக்காக சேவையாற்றும் உயர்ந்த குணம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அனர்த்தங்களின்போது மற்றும் அதனைத் தொடர்ந்து செஞ்சிலுவை சங்கம் முன்னெடுக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளின்போது தொண்டர் ஊழியர்களின் பணி மிகவும் வரவேற்கத்தக்கது என சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான குழுவின் தலைவர் யொவெஸ் பியோவெனோய் அவர்கள் தெரிவித்துள்ளார். இலங்கையின் ஆயுத மோதலின் பலனாக ஏற்பட்ட பிரச்சினைகள் நிறைவடைந்த பின்னணியில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செஞ்சிலுவை சங்கமும் அதன் தொண்டர் ஊழியர்களும் பங்களிப்பு வழங்குவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து தொண்டர் ஊழியர்களின் தேவை தொடர்பில் விவரித்துள்ளன. அவர்கள் அவசர தேவைகளின்போது மாத்திரம் உதவி செய்வதற்காக உள்ளவர்கள் அல்ல. நாளாந்தம் அவர்கள் அமைதியாக இந்த உலகத்திலுள்ளவர்களுக்காக பணியாற்றுபவர்கள்” தனிப்பட்ட அர்ப்பணிப்புடனும் செயற்திறனுடன் அரச மற்றும் பங்காளர்களுடன் இணைந்து செயலாற்றுவது அவசியமாகும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உங்கள் சமூகத்திலிருக்கும் தொண்டர் ஊழியர்களை நன்றிகளை தெரிவித்துக்கொள்வதற்கும் அவர்களது சேவையை பாராட்டுவதற்கும் மே மாதம் 8ஆம் திகதி எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

**மேலதிக விபரங்கள் அல்லது நேர்காணல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்**

திரு. மஹுஸ் ஜொனி – தொடர்பாடல் முகாமையாளர் ஐகுசுஊ 077-3502156
திருமதி. சரசி விஜேரத்ன – தகவல் அலுவலர் , ஐஊசுஊ 077-3158844

The Red Cross Movement in Sri Lanka promotes the humanitarian activities across 26 branches in the island by coordinating disaster relief and encouraging development support, while seeking to prevent and alleviate human suffering. The International Federation, its 186 National Societies and the International Committee of the Red Cross together constitute the International Red Cross and Red Crescent Movement.